**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 09ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இ.ம.எண்.8/2026 இன் அ.வ.எண்.227/2019**

1. பெருமாள் பல்லவராயர்(இறப்பு)
2. P.சந்திரசேகர்
3. P.முத்து ஆனந்தன்
4. P.செல்வம்

அக்தார்கள்,
ஸ்ரீ புது அம்மன் திருக்கோவில்,
கண்டியப்பேரி ... மனுதாரர்கள்/வாதிகள்

–எதிர்–

1.சின்னத்துரை
2.சுஜின்ராஜா ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 03.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151 –ன் படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) அசல் வழக்கானது மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மாண்புமிகு

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது W.P(MD)No.19365 of 2023 and W.M.P(MD) Nos.16026 & 16027 of 2023ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் சார் ஆட்சியர் திருநெல்வேலி அவர்கள் விசாரணை செய்து பட்டா சம்மந்தமாக பிறப்பித்த உத்தரவை உறுதிபடுத்தியுள்ளது. எனவே மனுதாரர்கள் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்தரவுகள் மற்றும் சார் ஆட்சியர் திருநெல்வேலி அவர்கள் 18.06.2021ம் தேதி பிறப்பித்த செயல் முறை ஆணையும் மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றும் மேற்படி ஆவணங்களானது இம்மனுவிற்கு பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றும் மேற்படி ஆவணங்களை இதற்கு முன்னர் தாக்கல் செய்யாததற்கு எந்தவிதமான காரணத்தையும், மனுதாரர்கள் அபிடவிட்டில் கூறவில்லை என்றும் இந்த மனுவானது அசல் வழக்கை காலதாமத படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

5) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியவாறு மனுவில் கண்ட ஆவணங்களை மனுதாரர்கள் பக்க ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

7) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் / வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது வா.சா.1ன் மூலம் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு கட்சியை நிரூபிக்கக் கூடிய வகையில், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்கள் பக்க ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதினாலேயே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டதாக கருத முடியாது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரர்களையே சார்ந்தது ஆகும்.

9) மனுதாரர்கள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்யும் போது, எதிர்மனுதாரர்கள் தங்களது தரப்பு ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளலாம் என்றும், மேற்படி ஆட்சேபனைகளை நீதிமன்றம் பரிசீலனை செய்து, அதனடிப்படையில் மேற்படி ஆவணங்களின் ஏற்புடைமையை முடிவு செய்து கொள்ள முடியும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) எனவே, இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், ஒருவேளை அசல்

வழக்கினை தீர்மானிப்பதற்கு மேற்படி ஆவணங்கள் உதவ வாய்ப்பு இருந்தாலும், இருக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) தற்போது மனுதாரர்கள் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் சாட்சியத்தன்மையை ஆராய்வது ஏற்புடையதாக இருக்காது. இவ்வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் அவசியமானதா இல்லையா என்பதை வழக்கின் இறுதி கட்டத்தில் தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதாலும், குறுக்கு விசாரணையின் போது மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியிடம் கேள்விகள் எழுப்பி தெளிவு பெற எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளதாலும், நீதியின் நலன் கருதி வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 09ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 09.06.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.06.09 17:24:41 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

Order uploaded on 09.06.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.06.09 17:24:47 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.8/2026 இன்</u>**
**<u>அ.வ.எண்.227/2019</u>**

சீரான / வரைவு உத்தரவு

**09.06.2026**